பெயர் சண்முகம் PW1

13.10.2023

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

அ..சா.8 அண்ணாதுரை என்னுடைய மாமனார் ஆவார். அ.சா.9 என்னுடைய மைத்துனர் ஆவார். அ.சா.ஆ.1 புகாரை போலீசாராத் தான் தட்டச்சு செய்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். எங்கு வைத்து எது தாயார் செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. அ.சா.ஆ.1 புகாரில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். சம்வத்தன்று நான் என்னுடைய தந்தையை அழைத்துக்கொண்டு காஞ்சிபுரம் வந்து அங்கிருந்து நேராக சென்னை சென்றேன். சம்பவத்தன்று நான் சென்னையிலிருந்து திரும்ப ஊருக்கு வரவில்லை என்றால் சரிதான்.அதனால் நான் பாலுசெட்டி காவல் நிலையத்திற்கு சம்பவத்தன்று செல்லவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு சம்வத்திற்கு முன்னிட்டு என்னுடைய தந்தைக்கு எந்தவொரு பிரச்சனையும் ஏற்பட்டதில்லை. மணிகண்டன் எந்தவொரு பணத்தையும் கடனாக கேட்கவில்லை என்றால் சரியல்ல. கடன் கேட்டதாக என் தந்தை என்னிடம் சொன்னார். எனது தந்தைக்கு அவ்வப்போது மது அருந்தும் பழக்கம் இருந்தது. என்னுடைய தந்தை ஒரு நிலத்தரகர் என்பதால் எதிரியின் இடத்தை சென்னையை சேர்ந்த ஒரு நபருக்கு விற்பனை செய்ய நிர்பந்தித்து வந்தார் என்றால் சரியல்ல. இந்த விவரத்தை என்னுடைய புகாரிலும் போலீசார் விகாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.1 புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது கிடையாது. ஆஜர் எதிரி அவருடைய இடத்தை என்னுடைய தந்தைக்கும் அவர் சொல்லும் நபருக்கும் விற்க மறுத்த காரணத்தினால் போலீசாருடன்

சேர்ந்து இவ்வழக்கு புகாரை செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஆஜர் எதிரிக்கும இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

பெயர் சங்கீதா PW 6

13.10.2023

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. எனது கணவரும் எனது மாமனாரும் சொல்லிக்கொடுத்தற்கு இணங்க நான் இவ்வழக்கிற்கு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி இவ்வழக்கிற்கு சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல அவர் தான் ஈடுபட்டார்.

எஸ்சி.எண். 47/2020 பக்கம் 3

பெயர் சகுந்தலா PW 5

13.10.2023

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

எனது வீடு மணிகண்டனின் வீட்டிற்கு ஒரு வீடு தள்ளி அமைந்துள்ளது. நான் எனது கணவர் மற்றும் எனது குழந்தைகள் ஆகியோருடன் கூட்டு குடும்பமாக வாழ்ந்து வருகிறோம் என்றால் சரிதான். எனது கணவர் நிலதரகராக தொழில் செய்து வருகிறார். விவசாயம் எதுவும் செய்து வரவில்லை. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.